www.tamilarangam.net


# SOLT

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் SOLT

விடுதலைப் புலிகள் தமிழீழ Liberation Tigers Of TAMIL EELAM

**STUDENT ORGANISATION OF LIBERATION TIGERS**
(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX.)

15 செப்டம்பர் 1985 வேட்டு 3 அன்பளிப்பு-50P


## திம்புப் பேச்சுக்களை எதிர்த்து தமிழீழ மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டம்:

## ஆயுதப்போராளிகள்போல் வேடம்போடும் அரசியல்வாதிகளே! மக்கள் முன் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

## போலி இயக்கங்களை அடையாளம் காணும் காலம் எமக்கு வந்து விட்டது.

## தொடர்ந்து போராடும் இயக்கமே எம்மை வழி நடத்த வேண்டும்.




வெட்டுப் பேச்சுக்களுக்கும், வேட்டுச் சத்தங்களுக்கும் முடிவு கிட்டட்டும்!
உலகத் தமிழ் மாணவர்களே!
தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை கருவோடு அழித்திடவும், வேரோடு தகர்த்திடவும்,
தமிழினத்தின் அபிலாசைகளை, உரிமைகளை, உடமைகளை மண்ணோடு மண்ணாக்கிடவும்,
எமது தாய்த் தமிழ் நிலத்திலே மிதித்துத் தங்கள் பாவ சுவடுகளை பதித்துத்
தமிழனின் தேசிய வரலாற்றினை இல்லாத ஒன்றாக்கவும் கங்கணம் கட்டியிருக்கும் சிங்களப்
பௌத்த வெறியானது தனது சர்வாதிகாரத்தின், எதேச்சாதிகாரத்தின், இனசங்காரத்தின்
சாவு மணியைத் தனது காதுகளால் கேட்கும் காலம் இதோ நம்முன்னே பிறந்துவிட்டது.
காட்டுமிராண்டிகளையும், மனித நாகரீகத்தின் எதிரிகளையும் உலக பயங்கரவாதிகளின்
கைக்கூலிகளையும், தமிழ்த் தேசியத் துரோகிகளையும் துணையாக்கித் தனது கொடிய
தாக்குதலை செய்துகொண்டு இருக்கும் சிங்கள வெறித்துவம்,
இன்று... விண்வரை ஓங்கும் எமது இனத்தின் ஒருமைப்பட்ட, ஒரு வழிப்பட்ட விடுதலைக்
குரலை "போதும் போதும்" என்னும் அளவிற்கு கேட்டுக் கொண்டு இருக்கின்றது.
ஆமாம்.. தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் எமது இனத்தின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும்
ஆளமான அர்த்தம் பாய்ந்த கோசங்களும் எந்த இன்னல்களையும் ஏற்று எமது
விடுதலையை நாமே பெற்றிடுவோம் என்ற செய்தியை நமது பகைவன் மட்டுமன்றி உலக
நாடுகளும், எமது "பலவீனங்களும்" கேட்கும்படி எடுத்துச் சொல்லி இருக்கின்றன.

"இனியொரு விதி செய்வோம்......" விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ‘திம்பு’ப் பேச்சுகள் வம்புப் பேச்சுகளே



**இலங்கை தமிழ்ப் போராளிகளின் (LTTE-EPRLF-TELO-EROS-) நான்கு கூட்டுச் சேர்ந்த அமைப்பின் (LTTE-ENLF) கோரிக்கைகள்**

1. இலங்கையில் உள்ளடங்கிய தமிழ மாவட்டத்தை ஒரு தனித்த தேசிய இனமக்கள் கொண்டதாக பிரதமர் அங்கீகரிக்க வேண்டும்.
2. தமிழர்களின் தாய்நாடாக விளங்கும் பாகத்தின் (மேலாண்மையை) தேசிய ஒருமைப்பாட்டிற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
3. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டும்.
4. மலைவாழ் தமிழர்களுக்கு முழு குடி உரிமை பெற உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

**இலங்கை அரசின் நிபந்தனைகள்**

1. இலங்கையின் அரசியல் அமைப்பு இலங்கை பிரிக்க முடியாத ஒரேநாடு என்பதாகும்.
2. இலங்கையில் ஒரே அரசுதான் (UNITARY) இருக்க வேண்டும். அதாவது பல தேசிய இனங்களைக் கொண்ட கூட்டாட்சி (FEDERAL) அரசியல் அமைப்பல்ல.
3. சிங்கள தேசிய இனமக்களையும், புத்தமதத்தையும், சிங்களமொழியையும் கொண்ட நாடாகும் இலங்கை.
4. இவ்விதமாக அமைந்துள்ள ஒரே இனமக்களைக் கொண்ட இனவெறி அரசு, கூட்டமைப்பு தேசிய இனத்தை அங்கீகரிக்கவில்லை. (அந்த விதமான கூட்டமைப்பின் கீழ் தமிழ் இனம் வாழ முடியாது)

**திம்பு பேச்சு வார்த்தைகளில் இலங்கை அரசு சார்பில் பழைய நிபந்தனைகளைத்தான் வலியுறுத்திற்று. இக்கோரிக்கைகளை தமிழ் ஈழ மக்கள் ஏற்கெனவே நிராகரித்து விட்டனர். இலங்கை அரசின் பிடிவாத மனப்பான்மை எதைக் காட்டுகிறது? இலங்கைஅரசின் பிடிவாதத் தன்மையையும் விட்டுக் கொடுக்க முடியாத மனப்பான்மையையும் தான்பிரதிபலிக்கின்றன. உண்மையில் இலங்கையில் மீண்டும் அமைதி சமாதானம் நிலவவேண்டும் என்பதில் இலங்கை அரசுக்கு ஆவல் இல்லை. இந்த இடைவெளியை பயன்படுத்திக்கொண்டு இலங்கை அரசு அதிக அளவில் பாக்கிஸ்தான், சைனா, கொரியா நாடுகளிடமிருந்து யுத்த தடவாளங்கள் வாங்கி குவிப்பதில் முனைந்துள்ளது. தமிழர் வாழும் இடங்களான வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலையில் சிங்கள மக்களை குடியேறச்செய்து அவர்களுக்கு போர் ஆயுதங்களை அளித்து அவர்களை தமிழ் மக்களுடன் போராட தயார் செய்து வருகிறது.**

திம்புப் பேச்சுகள் என்ற இடைவெளியில் தனது சரிந்து போன ராணுவ பலத்தை சிங்கள அரசு சரிப்படுத்தப் பயன்படுத்துவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு தோழர் சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:

“திட்டமிட்டு பாலஸ்தீனத்திலிருந்து பாலஸ்தீனியரை முழுமையாக விரட்டி அடித்து விட்டு நாட்டை முழுவதுமாக யூதக்குடியேற்றங்களை இஸ்ரேலியசியோனிஸ்ட்டுகள் அமைத்தது போல் யுத்த நிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்தித் தமிழர் பகுதிகளின் எல்லையோரங்களிலுள்ள தமிழர்களைவிரட்டி விட்டு அங்கு சிங்களக்குண்டர்களைக் குடியமர்த்தும் சதி வேலையில் இலங்கை அரசு வேகமாக இயங்கி வருகிறது.

இலங்கை அரசின் கூலிப் படைகளுக்கு எதிராகக் களத்தில் தொடர்ச்சியானபோராட்டங்களை நடத்தி வந்த வே. பிரபாகரனின் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட ஏனைய விடுதலை அமைப்புகள் இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிகரமான சமரசப்பேச்சு நடத்தும் சூழ்நிலனை உருவாக்க இலங்கை அரசுக்கு நிபந்தனைகளை விதித்து யுத்த நிறுத்தத்தை மூன்று மாதங்களுக்குக் கடைபிடிக்க முன் வந்தன. ஆனால் இலங்கை அரசு எமது தாக்குதல்களினால் சீர்குலைந்து போன தனது இராணுவத்தை திடப்படுத்தவும் சரிந்து போன பொருளாதாரத்துக்கு முட்டுக்கொடுக்கவும், தமிழினத்தை இலங்கையிலிருந்து விரட்டியடித்துவிட்டுஇலங்கை முழுவதையும் சிங்கள நாடாக ஆக்கும் சியோசிச திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவகாசமாக யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி வருகின்றது.

11-7-85ல் குண்டர்களும், ஊர் காவற்படையினரும் கென்ற், டொலர் பண்ணைகளிலிருந்து ஒதிய மலை, பெரியகுளம், பட்டிக்குடியிருப்பு போன்ற இடங்களுக்குச் சென்று சொட்கன்களுடன் அங்குள்ள வீடுகளினுள் புகுந்து நகை, உழவு இயந்திரம், மிளகாய் போன்றவற்றைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர். அத்துடன் பலமான [illegible] வேலைகளிலும் ஈடுபடுகின்றனர். இக்குண்டர்களை கென்ற், டொலர் பண்ணைகளில் முகாமிட்டு இருக்கும் சிங்கள ராணுவத்தினர் பொதுமக்கள் என்ற போர்வையில் துப்பாக்கி (சொட்கன்)களைக் கொடுத்து குடியமர்த்தி இருக்கின்றனர். குண்டர்களின் இச்செயல்கள் இராணுவத்தினரின் தூண்டுதல் என்றே அறிகின்றோம். மேலும் இவர்களின் துன்புறுத்தலினால் பெரியகுளம் என்ற இடத்திலிருந்து பொது மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் வீடுகளையும் தீயிட்டுள்ளனர். சொட்கன்னால் சுட்டும் சிலரை காயப்படுத்தியுள்ளனர்.

முதூரில் கிவத்தை என்ற இடத்தில் 59 ஆம் கட்டையில் மூன்று பேரை இராணுவத்தினர் 10-7-85ல் கைது செய்துள்ளனர்.

அத்துடன் ஊர்காவற்படையினரும் வயலுக்குச் செல்லும் பொதுமக்களை சொட்கன்னால் சுட்டுக்காயப்படுத்தியுள்ளனர். இங்கு போலீசாரும் பொதுமக்களைத் துன்புறுத்தியுள்ளனர். சாம்பல் தீவுசந்தியில் இராணுவத்தினர் களவு விசாரிக்க வந்ததாகக் கூறி வீடுகளில் புகுந்து கிடங்குகள் கிண்டுகின்றனர். ஓடுகளை உடைக்கின்றனர்.

12-7-85ல் மட்டக்களப்புப் பகுதியில் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகமாக நடைபெறுகின்றன.

கல்லடி என்னுமிடத்தில் இருந்த இராணுவக்கொமாண்டோக்கள் கும்புறுமூலை என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டு தற்போது கல்லடியில் கடற்படையினர் முகாமிட்டுள்ளனர்.

களவாஞ்சிக்குடியில் போக்குவரத்து பஸ் ஒன்றை ராணுவத்தினர் மறித்து சோதனையிட்டபின் அதில் பிரயாணம் செய்த இரு இளைஞர்களை அடித்து துன்புறுத்திய பின் கைது செய்தனர். 11-7-85 முதல் கடந்த மூன்று நாள்களாக வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம் என்னும் பகுதியில் சிங்கள ராணுவத்தினரும், சிங்களக்குண்டர்களும் சேர்ந்து அப்பகுதியிலிருந்த தமிழர்களின் பத்து வீடுகளை அடித்து நொறுக்கி கடைகளைக் கொள்ளையடித்து ஒரு வீட்டிலிருந்த இளம்பெண்ணை கற்பழித்தனர் போதும்போது பல பெண்களின் [illegible] அணிகலன்களையும் பறித்துச் சென்றனர். இராணுவத்தினரின் தொடர்ச்சியான விரட்டும் செயலினால் பாவற்குளம் பகுதியிலிருந்து தமிழர்கள் பெருவாரியாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இதனால் தமிழர்கள் பெருவாரியாக காடுகளில் இருக்கின்றனர். பாவற்குளம் நகரப்பகுதியில் தமிழர்களைக் காண்பது மிகமிக அரிதாகி விட்டது. இங்கு இப்போது இராணுவத்தினர் சத்தவெடி தீர்த்த வண்ணம் இரவுபகலாக மக்களைத் திகில் அடையச் செய்து பயமுறுத்தியபடியே இருக்கின்றனர். இப்பகுதியில் இராணுவம் நிலை கொண்டுளளது. இங்கு வசித்த சிங்களவர்களை இராணுவத்தினர் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தியுள்ளனர்.

## தமிழர் பகுதிகளில் குடியேற்றம்

யுத்த நிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி வருவதுடன் எமது இயக்க வீரர்களையும் வேட்டையாடும் முயற்சியில் இறங்கியிருக்கிறது யுத்த நிறுத்தத்திற்கு பின் மட்டக்களப்பில் எமது இயக்க இளைஞர்களை சிங்கள இராணுவம் சுற்றி வளைத்த நேரத்திலும் எமது இயக்க வீரர்கள் யுத்த நிறுத்தத்தை மீறி ஆயுதங்களை பயன்படுத்த முன்வராததால் அவர்களை கைது செய்தனர். அவர்களில் ஒருவர் சைனட் அருந்தித் தன் உயிரை மாய்த்துக் கொண்டார். இவ்வாறு மற்றைய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தஇளைஞர்களையும் சிங்கள இராணுவம் வேட்டையாடி வருகிறது.

யுத்த நிறுத்தத்தைப் பொருட்படுத்தாத இலங்கை அரசு எமக்கு எதிராக நடவடிக்கைகளை தொடரும் பட்சத்தில் நாமும் யுத்த நிறுத்தத்தை கைவிட்டு தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக எதிர் நடவடிக்கைகளில் இறங்க வேண்டி வருமென எச்சரிக்கிறோம்.

-இவ்வாறு அந்த அறிக்கை கூறுகிறது.

## என்ன பேச்சு?

வெட்டி வெட்டிக் கொன்ற பின்பும்
வெந்தணலில் இட்ட பின்பும்
மட்டிகளோடிந்த என்ன பேச்சு ?-இனி
ஆயுதம்தான் எங்களுயிர் மூச்சு

மங்கயர்தம் அங்கமெல்லாம்
பங்கமுறச் செய்ததனை
எங்களினம் என்றும் மறக்காது-அட
பேச்சுவார்த்தை என்றும் சிறக்காது!

வீடுகடை வாசலெலாம்
வீணர் எரியிட்டதனை
மாடுகளா நாம் மறந்து போக-தமிழ்
நாடு ஒன்றே வேண்டும் இனி வாழ

பிச்சை என்று பலவருடம்
பல்லிளித்து நாம் இரக்க
நச்சர் எது நம்மவர்க்குத் தந்தார்-அவர்
தந்ததனை நாம் நினைத்து உய்வோம்

வெங்காயம் சீனிபுளி
வேண்டியமா கேட்பது நாம்?
பேசி விலை கொள்வதற்கு இங்கு -அட
ஏந்திடுக ஆயுதத்தை நன்கு

சின்னச் சின்னக் குஞ்சுகளைச்
சிங்காரப் பொம்மைகளைத்
தீயிலிட்டுக் கொன்றவர்கள் யாரோ-அந்தத்
தீயருடன் பேசுபவர் யாரோ?

தேக்குமரத் தேகமுடைத்
தீரமிகு வாலிபர்-தப்
பாக்கியினால் வீதிகளிற் சாய்ந்தார்-அவர்
சாய்ந்த பின்பும் பேசுவதா?-பாவம்

பாண்டவர்கள் தூதனுப்பிப்
பேசினரே கௌரவரோ
ஈண்ட நிலம் பெற்றனரா? இல்லை-உயர்
ஆயுதமே பாரதத்தின் பாதை

அ.ஆ.இ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

**(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)**

### தமிழீழ விடுதலைப் புலிகளும்.. TRAG உம்..

கொட்டும் மழையைக் கண்டதும் தோன்றி மறையும் காளான்கள் போன்று, இலண்டன் மாநகரிலும் அவ்வப்போது இயக்கங்கள் தோன்றி மறைவது யாவரும் அறிந்ததே. தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் பசியாறும் பல்வேறு இயக்கங்கள் இலண்டனில் இருப்பது, வரலாறு கண்ட உண்மை.

தமிழ் அகதிகள் பிரச்சனை, அளப்பரிய பிரச்சனையாக இலண்டனில் இருந்துவரும் இவ் வேளையில், TAMIL REFUGEE ACTION GROUP ( T R A G ) எனப்படும் அமைப்பு சம்பந்தமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து பொது மக்களிற்கு அறிவிக்கவேண்டியது நமது கடமையாகும்.

ஒன்று :

TRAG ஆரம்பிக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திடல் எவ்வித அங்கீகாரமும் வழங்கப்படவில்லை; அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் எவரும் TRAG இன் அங்குரார்ப்பணத்தின் போது பங்கு பெறவில்லை என்பதையும்,

இரண்டு :

TRAG இன் நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் எவரும் பங்குகொள்ள அனுமதிக்கப் படவில்லை என்பதையும்,

மூன்று :

TRAG இன் சார்பில் கூறப்படும் கூற்றுக்கள் எவற்றிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்ல, என்பதையும்,

நான்கு :

TRAG இன் பேச்சாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் எந்த நிலையிலும் அங்கத்துவம் வகிக்க வில்லை என்பதையும்,

இத்தால் தமிழ் மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

சரித்திரம் தொடர்கிறது



அன்று கண்டியர் அரசு

இன்று காட்டியர் அரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்


## Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)


## விடுதலைப்போராட்டத்தில் புதிய திருப்பம்!
## விடுதலை அமைப்புகள் ஒன்றுபட்டன!!



அண்மையில் தமிழீழவிடுதலைப்புலிகளும், ஈழத்தேசிய விடுதலைமுன்னணியும் இணைந்து கொண்டமை யாவரும் அறிந்ததே. நான்கு இயக்கத்தலைவர்களாலும் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட ஒற்றுமைக்கான உடன்படிக்கையில் ஐந்து அடிப்படைத் தீர்மானங்களில் ஒற்றுமைப்பட்டு செயற்படுவதென தெரிவித்திருந்தனர். அதேவேளை எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்து கூட்டாக முடிவெடுப்பதெனவும் தீர்மானித்தனர்.

எனினும், கூட்டாக பிரச்சாரங்களை மேற்கொள்வது பற்றியோ, அல்லது ஒருமித்த இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியோ, அல்லது கூட்டாக நிதி சேகரிப்பது பற்றியோ ஒற்றுமையில் இணைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இன்றுவரை எந்தவொரு தீர்மானத்திற்கும் வரவில்லை. முக்கியமாக பின்வரும் விடயங்களில்:


ஒன்று: தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கப்பிரச்சாரம், நிதிசேகரிப்பு ஆகியவற்றில் தொடர்ந்தும் தனித்துவமாகவே இயங்கி வருவதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கும், பொது நிதிக்கான எந்த ஒரு வங்கிக் கணக்கும் இல்லையென்பதையும்,

இரண்டு: இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழத்தேசிய விடுதலை முன்னணியின் ஓர் அங்கமல்ல. தமிழீழ விடுதலைப்புலிகள் ஈழத்தேசிய விடுதலை முன்னணியோடு சேர்ந்து கொண்டதாகவோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து கொண்டதாகவோ கருதப்பட முடியாதுடன், இவ் ஒற்றுமையமைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் இணைந்துகொண்டுள்ளதென்பதையும்,

மூன்று: தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எல்லா இராணுவ நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளால் தனித்தே மேற்கொள்ளப் பட்டதுடன், ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடனோ அல்லது ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு அமைப்புடனோ ஒருமுகப்பட்டோ அல்லது ஒன்று சேர்ந்தோ மேற்கொள்ள வில்லையென்பதையும் தமிழீழ மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கை.

*************************************



சிங்கள ராணுவத்தை எதிர்த்து போரிடும் 'விடுதலைபுலி'கள் (பிரபாகரன் தலைமையிலானது). ஒரு பகுதியினர் பயிற்சி பெறுவதை படத்தில் காணலாம்.

### ..டும்! டும்! டும்!

சொட்டும் இரத்தம்...உயிர்க்கட்டும்!- அவை
சுதந்திரக் கொடியாய்த் தளிர்க்கட்டும்!
கொட்டும் கண்ணீர்...தாய் நிலத்தைக்...குளிர்
ஊட்டும் நதியாய் நனைக்கட்டும்!
கட்டி வைத்த உணர்ச்சி யெலாம்...எமைக்
கூட்டி ஒருவழிப் படுத்தட்டும்!
வெட்டிப் பிரித்த பிரிவுகளோ...எமது
எதிரிக் குணவாய்ப் போகட்டும்!

கடலும்...மண்ணும்...கைத்தொழிலும்...எங்கள்
கையிருப்பாகி நிலைக்கட்டும்!
உடலும்...உயிரும்...உள்ளுணர்வும்...எமை
ஒரு தாய் மக்கள் ஆக்கட்டும்!
இடமும்...திசையும்...தொழில் நிலையும் எமைப்
பிரிக்கா தொன்றாய்ப் பிணைக்கட்டும்!
தடமும்...துணிவும்...உடல் வலிவும்...எமது
இளமைக் குணமாய் மணக்கட்டும்!

பெண்கள் நாட்டின் சக்திகளாய்...வளர்
இளைஞர் நெஞ்சிற் பலக்கட்டும்!
எங்கள் தாய்மண்...தமிழீழம்...அதை
ஆணும் பெண்ணும் ஆளட்டும்!
பொங்கும் மழலைச் செல்வங்கள்...அவர்
பண்பில் வீரங் கலக்கட்டும்!
மங்கையர் மாண்பிற் தாய்மையெனும்...மணம்
மாறு தென்றும் சுரக்கட்டும்!

இளைய தலைமுறைக்கு ஒளி ஏற்றப் புறப்பட்ட
புரட்சிப் புலிகள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இங்கே ஆயிரம் எண்ணங்கள் மலரட்டும்

## அவை மக்களிடையே புரட்சிச் செய்தியை எடுத்துச் செல்லட்டும்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

கலை தெய்வீகமானது, புனிதமானது அதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் அதில் உள்ள சம்பிரதாயங்களையோ, மரபுகளையோ மாற்றி கலையில் வளர்ச்சியாகவோ அல்லது புதிய வெளிப்பாடாகவோ கொண்டுவரவேண்டும் என்பதுதான் எமது அவா. கலை கலைக்காகத்தான் என்ற வாதத்தினை விடுத்து கலை மக்களுக்காகவும், மக்களை அறிவூட்டும் ஒரு செய்தியை எடுத்துச் செல்லும் ஒரு சாதனமாகவும், அவர்களது விடிவுக்கான வழியைக் காட்டுவதாகவும் அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமும் ஆகும்.

அதாவது கற்பிக்கும் கலை என்று நாம் பேச்சு வழக்கில் பாவிக்கின்றோம். மாணவர்களுக்கு ஓர் விடயத்தை தெளிவாக எடுத்து விளக்குவதும் ஒரு கலைதான். போர் தந்திரோபாயங்களைக் கையாள்வதும் ஒருவகைக் கலைதான். எதிரி யார் ? நண்பன் யார் ? என்று விளக்கி மக்களைப் பாதுகாத்து மக்களுக்கான அரசியலை உருவாக்குவதும் கலைதான். இவ்வாறே தெளிவான செய்தியை மக்களிடையே எடுத்துச் செல்லும் நாட்டியம், நாடகம், சினிமா, கவிதை என்பனவும் அரசியல் சார்பாக இயக்கப்படும் கலைவடிவங்களேதான் என்பதில் எந்தவித ஐயமும் கொள்ளத் தேவையில்லை.

இன்று நாம் பார்க்கும் பெரும்பாலான சினிமா, பத்திரிகைகள் என்பவை ஆளும் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் மக்களை உண்மையான உலகைப் பார்க்க விடாது ஒரு விதப் போதை மயக்கத்தில் வைத்திருப்பதாகவும்தான் இருக்கின்றது. (நாம் சரித்திரத்தை எமது வழிகாட்டியாகக் கொள்ளல் வேண்டும் அதாவது சீனாவில் மக்கள் புரட்சி வெடித்த காலத்தில் பிரிட்டிஸ் ஆட்சியாளர்களால் போதைவஸ்துக்களும், ஆபாசப் படங்களும் கடத்தப்பட்டு சீன மக்களை திசை திருப்ப முற்பட்டதை நன்றாக நினைவில் நிறுத்தி ஆட்சியாளர்களின் சதி முயற்சியிலிருந்து தப்பிக்க வேண்டும்) உண்மையிலேயே இது ஆட்சியாளரின் சதியே என்பதினை நாம் புரிந்து கொள்ளல் அவசியம். அதாவது இதிலிருந்து நாம் விடுபட்டு சரியான கலைவடிவத்தினைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் எமக்கு அதிகரித்து வருகின்றது.

அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்கி கதறி நிற்கும் மக்களுக்கு "குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்டதன் பின்பு குறையேதும் நமக்கேதடி" என்றும் "தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன் தெருவிலே பெண்களுக்கோயாத தொல்லை" என்றும் "அலைபாயுதே கண்ணா என்மனம் அலைபாயுதே" என்றும் திரும்பத் திரும்பப் பாடி அபிநயம் பிடிப்பதிலும் பார்க்க எத்தனையோ விதமான உணர்ச்சிகளையும், குறியீடுகளையும் கொடுக்கக்கூடிய இதே பரதநாட்டியக் கலையைப் பயன்படுத்தி மக்களின் குறை தீரும் முகமாகவும், அவர்களின் விடுதலைக்கான மார்க்கம் கிடைக்கும் முகமாகவும், அவர்களை ஒடுக்கும் எதிரிகளையும், எதிரிகளின் சங்காரத்தையும் உணர்த்துகின்ற கலைப்படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதே இன்றய காலகட்டத்தில் மேலானது என்பது எமது முடிவாகும்.

எமது மக்களின் இயல்பான வெளிப்பாடுகளாகிய நாட்டார் பாடல், கூத்து என்பவற்றை செழுமைப்படுத்தி மக்கள் மத்தியில் விடுதலைத் தாகத்தைப் பரப்ப முற்பட வேண்டும்.

விரகதாபத்தில் வாடும் காதலி காதலனுக்கு காற்றோடு தூது விடும் செய்திகள் எமக்கு இன்றைய காலகட்டத்தில் அவசியமும் இல்லை, தேவையும் இல்லை மாறாக "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்றும் இங்கே "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்" என்றும் எமக்கு "அச்சமில்லை அச்சமில்லை உச்சிமீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்றும் கூறுகின்ற விடுதலை உணர்ச்சியைத் தூண்டக்கூடிய பாடல்களுக்குரிய நாட்டியக் கலையையோ, நாடகக் கலையையோ வளர்க்க நாம் ஆவன செய்ய வேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும்.

கலையின் முக்கியத்துவம் இன்று சகலராலும் உணரப்பட்டுள்ளது. தமிழீழத்தில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் <u>விடுதலைப் புலிகளின் கலாச்சாரப் படையின்</u> உதவியுடன் நாம் காத்திரமான படைப்புக்களை உருவாக்கும் நடவடிக்கைகளில் மும்முரமாக இறங்க வேண்டும்.

மக்களிடையே இருந்து உருவாகும் காலத்தின் தேவையான கலை, இலக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல தயாராகவுள்ள விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கமான எமக்கு கலைஞர்களது உதவியும் கிடைக்குமேயானால் இக் கலைப் புரட்சியில் நாம் வெற்றி காண்பது திண்ணமாகும்.

"இனியொரு விதி செய்வோம்..."
இளைய தலைமுறைக்கு ஒளி ஏற்றப் புறப்பட்ட புரட்சிப் புலிகள்
விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
(பிரித்தானியா)

---

## அறை கூவல்!

ஏடா! என்தன்... தமிழத் தோழா!... வெற்றி...
எமக்கே யென்றும்... இனித் தோழா!
கொடுவான்... அரக்கர்... சிரம் வாங்கி... எம்
கொடி வான் பறக்கும்... நிலை காண்போம்!

தாய் மண் எங்கள்... தமிழீழம்!—செம்
பூ மண்ணுகிச் சிவந்து நின்றுள்!
பேயாம் பகைவன்... பிடியினிலே... அவள்
நோய் கொண்டின்று கலங்குகின்றுள்!

இன்று நடப்பது... இடைவேளை...
நாளை பிறக்கும் சுபவேளை!
கொன்று குவித்திடும்... அவர்வேலை...
உயிரப் போகும்... காவோலை!

ஈழம்... எங்கள்... இளஞ்சோலை...
இளைஞர்... எழுதும் கணக்கோலை
ஊழல்... இலஞ்சம்... பகற் கொள்ளை...
இல்லாதமைப்போம் செங்கோலை!

பகைவன் பிடிப்பான் தம்காலை...
பிளவுகள் போயின்... ஒரு மூலை...
உதிக்கும்... நமக்கும்... ஒருகாலை...
உணர்வோம்... உயர்வோம்... உயர்வோமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு வேங்கையின் வீர மரணம்

சங்கர்—

சுரேஷ்—

ஆயுதப் படைகள் வலை விரித்துத் தேடும் செ. சத்திய நாதன்.

இருபது வயதிலேயே தலை மறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கொரில்லா வீரன்; தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.


கண் திறக்காத பூனைக் குட்டியாக—நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீர மறவன். அரசபடையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில்—சுற்றி நின்று கமாண்டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்தபோது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துக் கொள்கிறன்.

சங்கர் அச்சம் என்றல் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்புக்களிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசபடைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி அவன் கிராமங்களில்,, வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத்தவறும் கூட ஒரு கொரில்லா வீரன்என்றமுறையில்தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானல் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்தி விட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் சட்டங்களில் விடுதலைப் போராளிகளை ஆயுதங்களோடு அரசபடைகள் கைது செய்வதை அனுமதிக்கும்போக்கானது,அரசபடைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினன்.

படுகாயமுற்ற நிலையிலும் கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கொரில்லாப்பிரிவின் மற்ருெரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவன், பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்து விட்டோம் என்று தெரிந்தபின் தான் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்துக் கீழே வைக்கிறன். உயிரோடும் ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனி மேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப் படையை அடக்கிவிட முடியும் என்று பாசிஸ சர்வாதிகாரிஜே.ஆர். ஜயவர்த்தன ஸ்ரீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது, நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கொரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின்மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது. நெல்லியடியில். அரசபடையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகல விரித்து, பக்கவாட்டில் நின்று அரசபடையினர்மீது குண்டு மாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கொரில்லாத் தாக்குதலின் வெற்றிக்குச் சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் போலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப் பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு, பிரதான வீதியிலிருந்து சற்றுத் தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின்மீது முன்பக்க வாயிலுக்கூடாகத் தாக்குதல்



சங்கர்

தோற்றம் 19.6.61

மறைவு 27.11.82

நடத்துவது என்பது விஷப் பரீட்சைதான். ஆனல் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்துவிட முடியும்? ஜி 3 துப்பாக்கி சகிதம் படுத்துக் கிடந்து சங்கர் சாவகச்சேரி போலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் அப்பகுதி அரசபடைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறன்.

எந்த விதமான வாகனத்தையும்நேர்த்தியாகச்செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முகப்பட்ட ஆற்றலுக்குச் சான்றகும். ஒரு கொரில்லா தாக்குதலையடுத்துஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் ஸ்தலத்திற்கு வரு முன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தை செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விஷயங்களை மற்றவர்களிடம்கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழு மூச்சாக இருந்தது. விடுதலைப்போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறர்கள்.

தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின்அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற - தூய்மை மிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டும்என்று அவன்எப்போதுமே சொல்லி வந்திருக்கிறன். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறன்.

சாகும் தறுவாயிற் கூட அவன் தன் உற்றர், பெற்றரை நினைக்கவில்லை. 'தம்பி தம்பி' என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண் கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனன்.

''ஒரு உண்மை மனிதனின் கதை'' என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மைமனிதனின் கதையே ஒரு வீர காவியம் தான். ★

## ஒரு...படுகொதியனின்...பயங்கரக் குமுறல்

துரோக...சஞ்சாரஞ் செய்வோம்! -எங்கள்...
தேசிய விடுதலைப்...புரட்சியைக் காப்போம்!
விரோதியர்...நெஞ்சை வெல்லாம்...-ஈழ
விடுதலைப்...பயிருக்கே...பசளையாய்...வார்ப்போம்!

பிரிவுகள்...பேசி யின்னும்...-தங்கள்...
பிண்டத்தை...வளர்க்கின்ற...பேய்களைச் சாய்ப்போம்!
உரிமைகள்...வீசி...மாற்றன் - காலில்...
வீழ்ந்திடும்...கணங்களைத்...தீயினிற்...சேர்ப்போம்!

ஒரு...புலி...பாய்தல் காண்டும்...ஒதுங்கி
வாழ்ந்திடும்...ஒநாய்கள்...தமையினங்...காண்போம்!
தரும்புதான்...இயலுமென்றல்...அதைத்
தருவதும்...மலைநிகர் தியாகமே யென்போம்!

செய்தியைப் படித்ததும் சீறிடுவார்...-பின்னர்...
சோர்ந்து படுத்திடுவார்!
தைதிமி...தைதிமி...என்றிடுவார்...பின்னர்...
தம்பாட்டிற் போய்விடுவார்!

திருமலை...தன்னியே...பலவுயிர்கள்...-மன்னார்
வவுனியா...எனும் படியாய்க்...
கொடுமைகள்...இனக்கொலை...நடந்தவுடன்...
பலதிசை...ஊடகங்கள்...
திடுமெனச்...செய்திகள்...பரப்பிவர...-அதைக்
கேட்டதும்...கொதித்து நிற்பார்!
அடுத்த நாள் விடிந்ததும்...செய்தியெலாம்...
புளிப் பேறிடப்...பழமை செய்வார்!

முடியுமா?...'விக்கெண்டிற்...சொப்பிங்' தன்னை...-விட்டு...
வரவுந்தான்...முடியுமோ?
குடி மக்கள்...நண்பர்கள்...'கெற்றுகதெர்ஸ்'...-விட்டால்...
விடுதலை...வேண்டுமாமோ?
அடியடா! பிடியடா!...என்ற கத்தி... -இங்கு...
ஒரு சிலர்...அணி வகுப்பார்!
பெடியளைத்...தவிர வோர்...ஐந்து பத்துப்...
பெரியவர்...கலந்து நிற்பார்!

12ம் பக்கம் பார்க்க

சீறுகிறது,

சிங்கள படை!

# குச்சவெளியில் பொலிஸ் நிலையத் தகர்ப்பும்

## கடற்படை முகாம் தாக்குதலும்.

1-6-85 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளினல் குச்சவெளிப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு ½மணி நேரத்தில் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்த பெருந்தொகையான ஆயுதங்களும் மற்றும் சகல பொருட்களும் கைப்பற்றப்பட்டபின் பொலிஸ் நிலையக் கட்டிடங்கள் முற்றகத் தகர்க்கப்பட்டன.

பொலிஸ்நிலையத்தினருகிலிருந்த கடற்படை முகாம்மீது மூன்றுமணி நேரமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதலில் பெருந்தொகையான கடற்படையினர் கொல்லப்பட்டு முகாம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் பக்கம் எவ்வித இழப்புகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

SOLT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புரட்சியின் தோற்றம்

வணங்கிய தெய்வங்கள்...
வாழ்த்துகள் பாடி...
வளர்த்தனர் எங்கள்...
தமிழ் இளைஞர்!
கைகளில்... ஏந்திய...
ஆயுதங்கள்.. நம்
கண்களில்... வடிந்த...
நீர்த்துளிகள்!

பணத்தனில் வீங்கிய...
பாவியர் ஆட்சியில்...
கலங்கிய தெங்கள்...
தமிழினமே!
அரசியல் அடிமைகள்...
ஏழையர்... என்றே...
எழுதினர்... சாசனம்...
தடி வர்களே!

ஊழலும்... இலஞ்சமும்...
சாதியின் கொடுமையும்...
வாழ்ந்திட... வீழ்ந்தன...
பெருமைகளே!
கோழைகள்... கால்களில்...
வாடிய தமிழரைக்...
கூவி அழைத்தனர்
இளைஞர்களே!

## அன்மையில் வீரமரணம் எய்திய தியாகி "அன்பு"க்கு அஞ்சலி

# அன்பு



தனபாலசிங்கம் (வெத்திலைக்கேணி)

இனத்தின் விடுதலையில் வேங்கையாய்
இளமையின் வேகத்தில் காதலனாய்
உணர்வுகள் மத்தியில் அன்(பு)பனை
உனக்கு எம்வீர வணக்கங்கள்

வீரம் கொண்டவுன் தோழ்கள்
வீழ்ந்தனவோ உடன் வேங்கைகட்காய்
ஆழ்ந்த கவலை கொண்டோம்
"அன்பு" உன்னைப் பிரிந்து

காதலியாள் உன்வரவை எதிர்பார்க்க
காலனவன் உன்னைக் கவர்ந்தானோ?
பாதகர்கள் எம்மைக் காக்க
பாசத்துடன் சாவை அணைத்தாயோ?

வீரகொண்ணும் உன்துணிவும் அதனால்
பீறகொண்ணும் பகைவன் நிலையும்
கூறவோம்யாம் இன்றுமென்றும் இதனால்
ஆறுதல் அடைவோம் தோழா!

"செபமணியர்"

## வீர மரணம் எய்திய வீர வேங்கை பயஸிற்கு எமது வீர அஞ்சலி





17-07-85ல் தமிழீழ விடுதலைப்புலி இயக்க வீரரான, இருபது வயதுடைய பயஸ் என்ற இளைஞர், நிராயுத பாணியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் மற்றொருவருடன் பயணம் செய்யும் போது சிங்களக் கொமாண்டோ படையினால் சுடப்பட்டார். கூட வந்த இளைஞர் தப்பியோடி விட்டார். பயஸ் உயிரோடு பிடிபடுவதில்லை என்ற இயக்கக் கோட்பாட்டிற்கு அமைய "சைனட்" நஞ்சை விழுங்கினார். கோபமடைந்த சிங்கள வெறியர்கள் பயஸின் உயிர் பிரியு முன், அவரைத் துப்பாக்கியினால் அடித்து, ஜீப்பில் அவரது உடலைக் கட்டி தமிழீழ மண்ணில் இழுத்துச் சென்று, அவரது உயிர் உடலை விட்டு பிரியும் வரைத் தாங்கொணாத் துன்பத்தைத் கொடுத்துக் கொன்றனர். வீரமரணம் அடைந்த தியாகிக்கு எமது அஞ்சலி.

"இயக்கத்தின் கொள்கையைக் கண்ணியமாகக் கடைப்பிடித்து, மாற்றானிடம் மண்டியிடாது வீரமரணம் அடைந்த மாவீரன் பயசே! உன் உடலைத் தான் பகைவன் அழித்தானே தவிர, நீ கொண்ட இலட்சியத்தை அவனால் அழிக்க முடியவில்லை, அழிக்கவும் முடியாது. இதனால் இன்னமும் ஆயிரமாயிரம் வீர வேங்கைகள் உருவாகிறார்கள் என்பதை அவன் உணரமாட்டான், நீ கொண்ட இலட்சியப் பாதையில் உன் தோழர் நாமும் இடை விடாது தொடர்ந்து நம் இலட்சிய 'தமிழீழத்தை' அடைந்தே தீருவோம் என உடலின் மீதும், உன் இலட்சிய தாகத்தின் மீதும் உறுதி கூறுகிறோம்.

உனக்கு எமது வீர வணக்கங்கள்"



# தியாகவேங்கையான வாசனுக்கு இதய அஞ்சலி

வாசன் அவனை நினைத்தவுடன் எம் நினைவுகளிலும், கண்களிலும் நிழலாடுவது ஓர் புன் சிரிப்பு. ஆயிரக்கணக்கானவர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட ஆனந்தச் சிரிப்பு. மரணம் அவனைத் தழுவிய போதும் கூட அதே சிரிப்பு அந்த மாவீரனின் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது.

வாசனை என்னும் பொழுதெல்லாம் எம் கண்களிலே கண்ணீர் வழிந்தோடத்தான் செய்கின்றது ஆனால் நாம் அழவில்லை......

## எம் இதயங்களின் ஆழத்தில் என்றும் வாழ்ந்து வரும் இவர்களின் நினைவுகள்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை இயக்கத்திற்கு நிதி குவிந்தது

## இளையராஜா-கங்கைஅமரன் இசை விழா

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிக்காக இளையராஜா, கங்கை அமரன் இணைந்து வழங்கிய திரை இசைத் திருவிழா சனிக்கிழமையன்று மாலை நேரு விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

பிரபல சினிமா நட்சத்திரங்களும், பின்னணிப் பாடகர்களும், திரைப்பட டைரக்டர்களும் இந்த விழாவில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். பொதுநல நோக்குடன் ஈழ விடுதலை நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் திரளான மக்கள் வந்திருந்தனர்.

### ரூ. 25 ஆயிரம் நன்கொடை

இந்த விழாவில் பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் 25 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார்.

விழா நடந்து கொண்டிருக்கும்போது சினிமா நட்சத்திரங்களும், மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் போட்டி போட்டுக் கொண்டு நன்கொடை வழங்கினார்கள் அதன் விபரம் வருமாறு:-

இளையராஜா சகோதரர்கள் ரூ. 2500, விஜயகாந்த் ரூ. 3 ஆயிரம், பாலுமகேந்திரா ரூ. 3 ஆயிரம், ராஜசேகரன் ரூ. 2500, டைரக்டர் எஸ்.பி.முத்துராமன் ரூ. ஆயிரம், நடிகை தேவிபாலா ரூ. ஆயிரம், சிங்கப்பூர் கிருஷ்ணன் ரூ. ஆயிரம், வழக்கறிஞர் குமாரி ராஜரத்தினம் ரூ. 500.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில் தமிழக அரசவை கவிஞர் புலமைப்பித்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

### நடிகர்கள்

ஜெய்சங்கர், விஜயகாந்த், சிவகுமார், விஜயகுமார், ராஜேஷ், [விஜுசக்கரவர்த்தி, இடிச்சபுளி செல்வராஜ், செஞ்சிகிருஷ்ணன், நளினி, அம்பிகா, ரேவதி, இளவரசி, ஜீவிதா இந்திரா, தேவிபாலா மோகனப்பிரியா ஆகிய திரைப்பட நட்சத்திரங்கள் வந்திருந்தனர். எஸ்.பி. முத்துராமன், பாலு மகேந்திரா, ராஜசேகரன் ஆகிய திரைப்பட டைரக்டர்களும் இந்த விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மலேசியவாசுதேவன், தீபன் சக்கரவர்த்தி, இளையராஜா, கங்கை அமரன், ஜெயச்சந்திரன், எஸ். என். சுரேந்தர், சிலோன் மனோகர், எஸ். ஜானகி, எஸ்.பி. ஷைலஜா, பூரணி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இசை நிகழ்ச்சியில் திரைப்படப்பாடல்களை பாடி ரசிகர்களை மகிழ்வித்தனர்.

நடிகர்-நடிகைகளின் பேட்டி நிகழ்ச்சி ரசிகர்களை மேலும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஆழ்த்தியது.

இளையராஜா பாரதியாரின் பாடல் ஒன்றை இப்போதுள்ள சூழ்நிலைக்கு பொருத்தமாக மாற்றி எழுதி பாடியபோது மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பிரதிநிதி முரளி, விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும் நிதியுதவி வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.



தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிக்காக இளையராஜா-கங்கை அமரன் இணைந்து வழங்கிய திரை இசை திருவிழாவில் ராஜேஷ், ஜீவிதா மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்றனர்.

### சும்மா... இருப்பமோ

படுகொலை செய்யும்...பாவியர் ஆட்சியிற்...
பாடியும்...ஆடியும்...களிப்போமா?...எங்கள்...
ஒரு தமிழன்னை...விழிகளில்...வடியும்...
குருதி நீர் கண்டும்...கொதித் தெழாதிருப்போமா?
'அடிமைகள்' என்றே...அகிலமும்...பழிக்க...
அகதிகளாய் நாம் நடப்போமா?...இந்தக்
கொடுமைகள் நெஞ்சில்...உறைத்திடா...தின்றும்...
கழுதைகளாய் நாம் சுமப்போமா?.. கடைக்
கழுதைகளாய் நாம் சுமப்போமா?

இரத்தம் வடியும்...கரங்களால் எம்மை...
இறுக்கிப் பிடித்தனர்...சிங்கள வெறியர்!
உரத்துக் கத்தினோம்...உரிமையைக் கோரினோம்!
உடைமைகள் அனைத்தையும்...தீயினில் இழந்தோம்!
மாத்துப் போனதோர்...இராணுவ ஆட்சியில்...
உடலும்...உயிரும்...மானமும் இழந்தோம்!
சேர்த்தினைக் கொய்தும்...சிதையிலா தெரித்தும்...
சிறையினில்அடைத்துக் கொல்லவும்...கண்டோம்!

மங்கையர் கற்பும்...மாண்புகள் யாவும்...
மனித் தமிழ் வாழ்வும்...மயங்கிடக் கண்டோம்!
கொங்கைகள் அறுத்தும்...கூந்தலை யெரித்தும்...
கொள்துகில் உரித்தும்...கொன்றிடத் துணிந்த...
செங்கையர்...கொடிய...சிங்களக் கூலிகள்...
செலுத்திடும் ஆட்சியிற் சிதைவுகள் கொண்டோம்!
இங்கினி...இவரின்...ஆணைகள் ஏற்று...
இருப்பமோ...சீறி...எழுந்திடா திருப்போமா?


தமிழ் ஈழ விடுதலை நிதிக்காக
நீண்ட இடைவெளிக்குப் பின்

இளையராஜா-
கங்கை அமரன்
இணைந்து வழங்கும்



திரை இசைத் திருவிழா

இடம்: நேரு ஸ்டேடியம் :: நாள்: இன்று (20-7-85) மாலை 6 மணி

S. ஜானகி, S.P. பாலசுப்ரமணியம், வாணிஜெயராம்
மலேசியா வாசுதேவன், தீபன் சக்கரவர்த்தி,
S. N. சுரேந்தர், கோவை சவுந்திரராஜன்,
S. P. சைலஜா, பூரணி-இந்திரா, A.E. மனோகரன்

இவர்களுடன்

முன்னணி நட்சத்திரங்கள், இயக்குனர்கள்

பங்கு பெறுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் (SOLT)

விழா அமைப்பாளர்: புலவர் புலமைபித்தன்


கட்டணம்: ரூ. 100, 50, 25, 10, 5

அரங்கத்தில் முன்பு டிக்கட் பெற்றுக்கொள்ளலாம்.


இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நிரந்தர தீர்வுகாண பூடான் சமரச பேச்சில் 'விடுதலைப்புலி'களை கைது செய்ய வேண்டும் என்று ஜெயவர்த்தன அரசு கேட்டு கொண்டு உள்ளது.

போர் ஒப்பந்தத்தை மீறி சிங்கள ராணுவத்தினர் தமிழர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் பூடான் சமரச பேச்சில் கலந்து கொள்ள மாட்டோம் என்று விடுதலைப்புலி தலைவர்கள் அறிவித்து உள்ளனர்.




# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலையும் அதில் இந்தியாவின் நிலைப்பாடும்

தமிழ் மக்கள் வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதவாறு நெருக்கடி நிறைந்துள்ள இந்தக் கால கட்டத்தில் தமிழ் மக்கள் தங்களது விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் நிலைப்பாடு, செயற்பாடு பற்றி சரியான அரசியல் தெளிவைப் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

எமது பழைய அரசியற் தலைவர்கள் இந்தியாதான் எமது விடுதலையைப் பெற்றுத் தரவேண்டும் என்று இந்திய அரசாங்கத்திடம் தஞ்சம் புகுந்துள்ளனர். வேறு சிலரோ இந்திய இராணுவம் எமது விடுதலையைப் பெற்றுத்தரும் என நம்பி, கை கட்டிக்கொண்டும் இருக்கின்றனர். ஆனால்,

1. இந்திய அரசு எமது தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கின்றதா? இல்லையா?
2. ஆதரிக்கின்றது எனக்கொள்வோமாயின் அந்த தமிழீழ விடுதலை எந்த வகையினைச் சார்ந்தது? முதலாளித்துவ அரசைக் கொண்டதாக இருக்குமா அல்லது சோசலிச அரசைக் கொண்டதாக இருக்குமா?
3. இந்திய இராணுவ நடவடிக்கையினால் எமது மக்களுக்கு தமிழீழ விடுதலை கிடைக்குமானால் அதனால் நன்மையுண்டா தீமையுண்டா?

என்ற கேள்விகளுக்கு சரியான தெளிவான விடைகளைப் பார்ப்போமானால் எமது விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவினது பங்கு எந்தவகையில் அமையவேண்டும் என்பதனை நாமே சிந்தித்து செயலாற்ற முற்படலாம். இக் கேள்விகளுக்கு நேரடியான பதில்கள் இக் கட்டுரையில் இல்லாவிடினும் பதில்களை விளங்கிக் கொள்ளும் அளவிற்கு தரவுகள் தரப்பட்டுள்ளன. இக்கேள்விகள் ஒரு முதலாளித்துவ நாடு தனது அயல்நாடுகளில் ஏற்படும் ஒரு இன விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொள்ள முற்படும் போது அந்நாட்டு மக்கள் மத்தியில் எழக்கூடிய சாதாரண கேள்விகளே ஆகும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவிற்கு ஒரு முற்போக்கானபாத்திரமுண்டு. அவற்றை விளங்கி அவற்றிற்கு நாம் ஆதரவளிக்க வேண்டும். இந்தியாவின் உதவியையும் பெறலாம். ஆனால் அதேவேளை பிற்போக்கான நடவடிக்கைகளுக்குள் நாம் சிக்குண்டு போய்விடக் கூடாது. இதில் சரியான கண்ணோட்டமும் சரியான திட்டமிடலும் இருக்க வேண்டும் அப்போதுதான் எங்களது எதிர் காலத்தை நாங்களே நிர்ணயிக்கலாம்.

இன்றைய வல்லரசுகள் தான் முந்தி நீ முந்தி என்று போட்டி போடுவதற்கு இராணுவ பலத்தையே பாவிக்கின்றனர். இத்தகைய சூழ் நிலையில் இந்தியா குறித்து இலங்கையின் நிலைப்பாடு யாதெனப் பார்ப்போம். இந்தியா பொறுத்து இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை விளக்கி நிற்கும் முக்கியமானதோர் உதாரணமாக, இந்தியா சுதந்திரமடைந்ததும் எவ்வித போராட்டமும் இல்லாமல் பிரித்தானியர் இலங்கையை விட்டு வெளியேறியதை எடுத்துக்கொள்ளலாம். இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஸ் (அன்றைய கிழக்குப் பாகிஸ்தான்) போன்ற நாடுகளால் ஏற்பட்டுள்ளஎல்லைப் பிரச்சனை போன்ற பிரச்சனைகளால் இந்தியாவிற்கு ஒரு நெருக்கடியான நிலை இன்றும் இருந்து வருகின்றது. இத்தகைய நிலையில் இந்தியாவிற்கு தெற்கே இந்தியாவின் பாதுகாப்பு பொறுத்து பிரதான மையத்தில் அமைந்திருக்கும் இலங்கை, இந்தியாவிற்கு விரோதமற்ற ஓர் அரசாகத்தான் (இந்தியாவின் செல்வாக்கிற்குட்பட்ட ஓர் அரசாக) அமைந்திருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பமாகும். அதாவது இந்தியாவின் நோக்கு நிலையில் இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட ஒரு தீவே ஆகும்.

இதனால் இந்தியா, இலங்கை குறித்து வைத்துள்ள கொள்கை யாதெனில், இந்தியாவிற்குப் பாதகமற்ற போக்கை இலங்கை உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையுடன் முரன்படாதவாறும், அதேவேளை எந்தவொரு வெளிநாடும் இலங்கையில் தனது செல்வாக்கை செலுத்த முடியாதவாறும் (அது அமெரிக்காவாக இருந்தாலென்ன சோவியத் யூனியனாக இருந்தாலென்ன இந்தியா விரும்பாது) இலங்கை இருக்க வேண்டுமென்பதாகும் இவ்வாறு தனது கட்டுப்பாட்டை மீறாத நாடாக இலங்கையை வைத்திருப்பதற்கே இந்தியா விரும்பும் இவ் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இந்தியா, இலங்கை அரசாங்கத்துக்கு உதவிகளைச் செய்வதன் மூலம் முற்படலாம். அது முடியாது எனத் தெரிந்து கொண்டதால் இலங்கையில் பதவியில் இருக்கும் அரசிற்குப் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கி அதன் மூலம் இந்திய அரசிடம் இலங்கை அரசினை பணியவைக்க எத்தனிப்பதுமட்டுமல்லாமல், இன்றைய சூழ் நிலையில் (1983-85) இந்தியா இத்தகைய திட்டத்தையே செயலாக்குகின்றது.

1970 களின் ஆரம்பத்தில் உருப்பெறத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் ஐ.தே.க ஆட்சியில் உக்கிரமடையத் தொடங்கியது. தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடுரமான இன ஒடுக்கு முறை இந்தியாவின் உள் நாட்டு அரசியலில் எதிரொலிக்கத் தொடங்கியது. இத்தகைய சூழ் நிலையில் இலங்கையில் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளின் செல்வாக்கு வளர்ச்சி அடைவதைத் தடுப்பதற்கும், இலங்கை அரசு இந்தியாவின் தலைமையினை ஏற்க வைப்பதற்கும் ஏற்ற வகையில் இலங்கையில் எழுந்த இனப்பிரச்சனையை இந்தியா கையாளத் தொடங்கியுள்ளது.

முதற்கட்டமாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்களை பெருக வைப்பதற்கான அடிப்படை வசதிகளைச் செய்வதன் மூலம் உள்நாட்டு ரீதியில் இலங்கை அரசிற்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தியது. இதன் வாயிலாக இலங்கை அரசை இந்தியாவிடம் பணியவும் வைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்மையிலேயே ஆயுதம் தாங்கிய எமது இயக்கங்களை விரிவடைய வைப்பதில் இந்தியாவிற்கு இரண்டு தந்திரோபாயங்கள் உண்டு.

1. எமது இயக்கங்களின் வளர்ச்சியால் இலங்கை அரசு நெருக்கடிக்குள்ளாதல்.
2. எமது இயக்கங்களின் திடீர் வளர்ச்சியால் சோசலிச தமிழீழ அரசை அமைக்கக்கூடியளவு பலம் பெறுது செய்தல் என்பதாகும்.

சோசலிசம் என்பது ஒரு விதி ... அது ஒரு ஒழுங்கமைப்பு ... அது ஒரு கட்டுக்கோப்பு
"புரட்சிகர சூழ்நிலை இருந்துவிட்டால் மட்டும் புரட்சி வந்துவிடாது, அதற்கோர் புரட்சிகர ஸ்தாபனமும் வேண்டும்" .......................................லெனின்.
லெனின் தெளிவுபடுத்துகின்ற இந்த விதி முறைகளை புரட்சியாளர்களை விட எதிரி நன்கு விளங்கி வைத்துக் கொண்டு ஸ்தாபனங்களை புரட்சிகரமற்றதாக்குவதில் பல யுக்திகளைக் கையாள்கின்றான். ஒரு நாட்டில் புரட்சிகர இயக்கம் ஏதும் தோன்றும் போது அதனைத் தோற்கடிப்பதற்கான இலகுவான வழியொன்று அவ்வியக்கத்தை முதிர்ச்சியற்ற வளர்ச்சிக்கு தள்ளுதலாகும்.

அமெரிக்காவின் இந்தத் தந்திரத்தைத்தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் குறித்து இந்தியா கையாள்கின்றது. 1983 யூலை தமிழின ஒழிப்புக் கலவரத்தைத் தொடர்ந்து திடீரென இயக்கங்கள் வீங்கிப் பெருப்பதற்கான ஓர் அடிப்படை வசதி(பணம், ஆயுதம், பயிற்சி முகாம்கள்) ஏற்பட்டது. எந்த ஒரு இயக்கமும் தனிப்பெரும் வளர்ச்சியை அடைய முடியாதவாறும், ஒன்றுக்கொன்று ஏறக்குறைய சமமான வளர்ச்சியை அடையக்கூடியதுமான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. பல இயக்கங்கள் தோன்றின. மற்றய இயக்கங்களை குழப்பக்கூடிய இயக்கங்களும் வளர்ந்தன. (இதிலிருந்து நடக்கப்போவது என்ன-வெனில், நிதானமற்ற இத் திடீர் வளர்ச்சி இயக்கத்துக்குள் ஒழுங்கின்மையைக் கொண்டுவரும், குழப்பத்-தைக் கொண்டுவரும், கட்டுக்கோப்பைக் குலைக்கும், இயக்கம் ஸ்திரமடையாது. அதுமட்டுமல்லாது குழம்பிய நிலையில் குழப்பகரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களையும் குழப்பும்.)

ஒட்டு மொத்தமாக இந்தியா விரும்புவது என்னவெனில் இலங்கை அரசு மட்டுமல்ல எமது விடுதலை இயக்கமும் உறுதியற்ற, கட்டுப்பாடற்ற ஸ்தாபனமாகவும், அது இந்தியாவின் மீது சார்ந்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதே ஆகும். இன்னும் சுருங்கச்சொல்வோமானால் இந்தியாவின் மீது சார்ந்திருக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதே ஆகும். இன்னும் சுருங்கச் சொல்வோமானால் இந்தியாவின் தேவைக்கேற்ப இலங்கை அரசிற்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கக்கூடிய வகையில்தான் தமிழீழப் போராட்ட இயக்கங்கள் வளர்ச்சியடைந்திருக்க வேண்டுமே தவிர அவை ஆட்சி அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் அதாவது தமிழீழத்தை அடையக்கூடிய வகையில் வளர்ச்சியடையக் கூடாது என்பதே இந்தியாவின் திட்டமும் விருப்பமும் ஆகும்.
(இந்த நேரத்தில் பங்களாதேஷின் விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றி தெரிந்திருக்க வேண்டியது அவசியம். அதாவது இந்தியா இரண்டு முக்கிய தேவைகளின் நிமித்தமே பங்களாதேஷை உருவாக்குவதற்கான இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியது. ஒன்று பாகிஸ்தானைப் பலவீனப்படுத்துவதன் பொருட்டு பங்களாதேஷைத்தனியே பிரித்தது. இரண்டு அவ்வாறு உருவாகும் பங்களாதேஸ் பலவீனமானதுள்ளதாயும் அதேவேளை ஒரு வலதுசாரி அரசாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். ஆதலால்தான் பங்களாதேஸ், முதிர்ச்சியற்ற வளர்ச்சியால் கிடைத்த அரைகுறை விடுத-லையால் திண்டாடியவண்ணம் இன்றைய நவீன விஞ்ஞான உலகில் முன்னேற முடியாமல் இருக்கின்றது. இதே போன்ற அரைகுறை விடுதலை எமக்கு வேண்டவே வேண்டாம்.)

இறுதியாக தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது இதுதான். அதாவது இந்தியா எமக்கு உதவி செய்யலாமே தவிர எமக்கு தலைமை தாங்க முடியாது. எமது எதிர் காலத்தை இந்தியா நிர்ணயிக்கக்கூடாது, நாங்கள்தான் நிர்ணயிக்க வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பது எங்கள் தலைவிதியை நாமே நிர்ணயிப்பது என்பதுதான். நாம் கோருவதை, எமக்குத் தேவையானவற்றை எமது விருப்பப்படி இந்தியா எமக்கு தந்து உதவி செய்யலாமே தவிர இந்திய ஆட்சியாளர் தாம் நினைத்தவாறு தமது நலனுக்கு ஏற்றவாறு எந்த ஒரு தீர்வையும் எம்மீது திணிக்கக் கூடாது.

எமது சுயநிர்ணய உரிமையை இந்தியாவிடம் அடகு வைக்காமல் அல்லது அடிமைச்சாசனம் எழுதிக் கொடுக்காமல் எமதுதலைவிதியை நாமே நிர்ணயிக்கக் கூடிய, அதனை வென்றெடுக்கக் கூடிய வரலாற்-றுச் சூழ்நிலை போதியளவு இன்னமும் நிலவுகின்றது. அதனைப் பயன்படுத்தி விஞ்ஞானபூர்வமாக போராட்டத்தை வழிநடத்தினால் நாம் தமிழீழப் போராட்டத்தில் முழுமையான வெற்றியை அடையலாம். அது நிச்சயமாக எமதுகையிலேயே இருக்கின்றது.

நன்றி -- எஸ். சர்மா

**************************************************

"புரட்சிகரத் தலைமையை உருவாக்குவோம்........"

"நாம் விரும்புவது உண்மையான நிரந்தரமான ஒருமைப்பாட்டையே, இந்த ஒற்றுமையானது புரட்சிகர பாட்டாளி வர்க்கத் தலைமையை கட்டி எழுப்பும் இலக்கைக் கொண்டதாக இருக்க வேண்டும்."

வே. பிரபாகரன்,
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்.

**************************************************

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



....(தொடர்ச்சி)

# அம்மாவுக்கு....ஒரு மடல்!

அந்நியச் செலாவணி....
நெஞ்சினில் நினைத்துத்
தந்நிலம்....விட்டே....
வந்தவர்....நாமெனச்
சொன்னவர்....கண்டேன்!
சொர்க்கத்தைத் தேடி....
இந்நிலம்....வந்தோம்!
என்றெவரும்....சொன்னார்
சுந்தரத் தமிழினம்....
என்றுமே....பஞ்ச....
அந்தரப்....பட்டே....
பலையுது....இன்று!

'அனுப்புங்கள்....இவரை....
மீண்டும்....இலங்கைக்கு!'
'தடுப்பு முகாம்களிற்....
தமிழர்கள்' என்றெலாம்....
அடுக்கடுக்காகப்....
பற்பல....செய்திகள்....
கொடுத்தன....செய்தி....
நிறுவனம்....பலவும்!

எப்படியம்மா....
எடுத்து நானுரைப்பேன்
என் மனம் பட்ட....
வேதனை யாவும்!
குப்பை போலெமைக்....
குறித்திவர் கூறியும்....
உணர்ச்சியை விற்ற....
ஊனர்களானோம்!

தாய் மண்ணெங்கள்....
தாய்த் திரு நாட்டிற்....
பாயிற் படுத்து....
உருண்டவர்....நாங்கள்!
காயும் நிலவிற்....
கட்டிலைப் போட்டுக்....
கவலையை....மறந்து....
உறங்கிய அன்று!
கூழினைக்....குடித்து....
வாழ்கையிற் கூடக்....
கோபுர வாழ்க்கை....
கூடிய அன்று!

அந்த நாளென்றோ....
ஓடி மறைந்ததே!
முந்தையிர் நாளெரு....
செங்களமானதே!
எங்களுயிரோடு....
உடைமைகள்....உரிமைகள்....
சிங்களர் கையினிற்....
சாம்பராய்ப் போனதே!

பாழ் படுமந்தச்....
சிங்களராட்சியிற்....
படுகொலை செய்யும்....
பாவியர்....ராணுவம்....
சூழ்ந்தெமைப் பிடித்துச்....
சித்திர....வதைகள்....
கோரச் செயல்கள்....
புரிந்தனர்....எம்மைக்
காரணமின்றிக்....
கடுஞ்சிறைவைத்தனர்....
யாரிதைக்....கேட்டார்?
யார் தடைபோட்டார்?

உழைக்கவா?....வந்தோம்!
உழைக்கவா?....வந்தோம்!
உண்மையைத் திரித்து....
உரைப்பவர் கூறட்டும்!
இனைத்திடும்....சன்னம்....
தரத்தி....உயிரைப்....
பிடித்து நாம் வந்தோம்!
பிழைத்தி வந்தோம்!

மாடியில் வாழும்....
தகைமையைத் தேடி....
ஓடிநாம் வந்தோம்....
என்பவர்....கூறட்டும்!
கோடி....கோடியாய்க்....
கொட்டிக் கொடுப்பினும்....
ஈடு செய்வரோ....
தாய் மண்ணின் வாசத்தை!

நமக்கு....இது வேண்டும்!
நமக்கு இது வேண்டும்!
இனக் கொலையை....யெதிர்த்தங்கே....
எழுந்திட்ட....புலிகளுடன்....
இணைந்திருந்தால்....ஈனச்சொல்....
எங்காதில் வீழ்ந்திடுமோ?
கணப் பொழுது....வாழ்ந்திடினும்....
காவியமாய்....உயிர் வளரும்

கொள்ளி வைக்கும்....உரிமையதைக்....
கொலை வெறியர்....கைகளிலே....
தள்ளிவிட்ட....தமிழ்க்குலத்தை---,
தந் தாயர்....தந்தையரை....
எல்லையின்றி....வருத்தும்....
இரக்கமற்ற பாவியரைத்....
தள்ளி நின்று பார்க்கும்....
தரங் கெட்ட பிள்ளைகளை----
எள்ளி நகையாடும்....
எமது பகை....ஈதன்மை!
பிள்ளைகளா....நாங்கள்!
பிண்டங்களாமன்றோ!

வருந்தாதே....அம்மா!
வருந்தாதே! என்பங்கைத்....
தருவேன்....நான்! தாயுனது....
பெருமைதனைக் காத்திடுவேன்!
பருந்தாகக் குதம்....
பகை கண்டே....யெழுந்திட்ட....
அருந் தமிழர் படை நோக்கி....
விரைகின்றேன்! விரைகின்றேன்!
இருந்தால்....நீ....பார்த்திடுவாய்....
எழிலான....தமிழ் த்....
திருநாட்டைத்....தமிழ் மறவர்....
ஆளுகின்ற....பெருஞ்சிறப்பை!

மாமன் மகள்....பொன்னிக்கு....
என் நிலைமை....கூறம்மா!
சாகவில்லை....உனது மச்சான்!
சாதனைகள் செய்வதற்குப்....
போகின்றான்....பகை நோக்கிப்....
போர்ப்பரணி....பாடுகின்றான்!
தாகமொரு தமிழீழத்....
தாயக மென் றோடுகின்றான்

பாவையவள்....கழுத்தினிலே....
பொற்றாலி....கட்டுபவன்....
கோழையிலைக்....கோழையிலை....
போர்முனையில்....நிற்கின்ற....
வீரமகன்,....சாவினையும்....
வரவேற்கும்....மனத்தீரம்....
ஊறுகின்ற....ஒரு தமிழன்....
என்றவட்கு சொல்லி விடு!

அம்மா நீ கூறுவது....
என் காதில் வீழ்கின்றது!
அடி வயிற்றைத் தடவியபடி....
வாழ்த்துகிறாய்....தெரிகிறது!
தடியனிவன்.., தன்மானம்....
இல்லாத....பிறவியென....
முடிவு செய்து விட்டிருப்பாய்....
இது பொய்யாய்ப் போனதென....
உன் பாட்டிற் பேசுகின்றாய்....
உன் நெஞ்சு விம்முவதை....
என் கண்கள் பார்க்கிறது....
உன் முலையை வெட்டாதே!

பங்கயமணாளன்

..............

***

(நன்றி:- விடுதலைப்புலிகள்; வீரவேங்கை; தினமணி; மக்கள்குரல்; மதுரைமணி; சுதேசமித்திரன்; விடுதலை; எதிரொலி; தினகரன்; தினத்தந்தி; தினசரி; அண்ணா; தீக்கதிர்; மாலை மலர்; மாலைமுரசு; தினமலர்; தினமுதம்;)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழத்தில் மக்கள்



பேச்சுவார்த்தையை எதிர்த்து



6ம் பக்கத் தொடர்ச்சி

ஆர்ப்பாட்ட ஊர்வலம்...காண்பவர்கள்...
அறிவார்கள்...தமிழரின்...எழுச்சி தன்னை..
கூப்பாடு போடவும் குரல்களின்றி...
நடப்பார்கள்...கொடியுடன் சிலதமிழர்!
சீமையில்...ஆயிரக்கணக்கிலே...
சிறப்பாக...வாழ்கின்றூர்...தமிழர்பலர்!
தாய்ப்பாடை...யில்லாமல்...நிலைமறந்து..
சாப்பாடு...தண்ணியில்...மிதக்கிறூர்கள் !

## வஞ்சனைக்கு பஞ்சணையா?

வெற்றியழகன்

குருதிநதி பாயுதங்கு
கோடிதலை சாயுதங்கே
கொடுப்பதற்குத் தயங்குகிறுன்
ஈழம் — இதைச்

சிறுபகுதி நாம் நினைத்தால்
சிந்தனையில் தாம்பதித்தால்
சிங்களத்தான் கொடுமையெலாம்
வீழும்!

நாமமைத்த மேடையிலே
நாட்டியமாட ஆடுகிருன்
நச்சரவச் ஜெயவர்த்தன
நாய்தான் — நாம்

ஆமையென நகராமல்
அரிமாவாய்ப் பாய்ந்தெழுந்தால்
அனற்புழுவாய்த் துடிதுடித்து
மாய்வான்!

சிறுவர்களைக் கொல்லுகிருன்
சிறைபிடித்துக் கள்ளுகிருன்
சித்ரவதை செய்யுகிருன்
ஈனன் — நம்மை

எருமையென எண்ணுகிருன்
ஏளனமும் பண்ணுகிருன்
இன்னுமென்ன தூங்குவதா
மானம்!

சிறுநரியின் வஞ்சனைக்குச்
சிரிப்புமலரைப் பஞ்சணையா
சிலிர்த்தெழுவோம் சமரசம் தான்
ஏனே — நாம

நெருப்பாற்றில் நீந்துகிறோம்
நாட்டுழவம் மாக்துமிரும்
நம்புலிகள் தியாகமெலாம்
வீணே?

கற்புநெறி காத்தவர்கள்
கனற்புலவாய் பூத்தவர்கள்
கற்புநெறி போவதன்ன
பாரயு — தோன

வெற்பெனவே தூக்கிடுவோம்
விளர்தலைத் தூக்கிடுவோம்
வெற்றியீழம் கண்டிடுவோம்
வாராய்!





நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

விடுதலைப் புலிகளின் இம்மானவர் இயக்கத்தின் பிரித்தானிய கிளையானது 16.05.85 அன்று விடுதலைப் புலிகளால் இலண்டனில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இப் பிரத்தானிய கிளையினது சகலவிதமான தபால் தொடர்புகள் கீழ்கண்ட முகவரிக்கே மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளுக்கான நன்கொடைத் தொகைகளோ, அன்பளிப்புகளோ அல்லது விடுதலைப் புலிகளின் பிரசுரங்களின் கொடுப்பனவுகளோ SOLT இற்கு அனுப்பும்போது, காசோலைகளை SOLT என்ற பெயரிற்கே அனுப்பி வைக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

(ADDRESS SOLT, BM BOX 3694, LONDON WC1N 3XX.)

PRINTED PUBLISHED AND ISSUED BY SOLT, BM BOX 3694, LONDON WC1N 3XX.
(For private circulation only)




எமது வெளியீடான SOLT பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும்

"ஆசிரியர்குழு SOLT"

என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழுநேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.